DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 485/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | பிரகாஷ் |
| Father / Husband Name | ஜானகிராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 17.06.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். என்னுடைய ஆண்டு வருமானம் என்ன என்றால் சுமார் ரூ.2 லட்சம் இருக்கும். எனக்கு SBI வங்கியில் மட்டும் தான் கணக்கு உள்ளது. நான் விவசாய கடன் அல்லது நகை கடன் ஏதாவது வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வங்கி கணக்கில் அதிகபட்சமாகவும் குறைந்தபட்சமாகவும் எவ்வளவு தொகை வைத்திருப்பேன் என்றால் சுமார் ரூ.50,000/- வைத்திருப்பேன். நான் வட்டி தொழில் ஏதாவது செய்கிறேனா என்றால் இல்லை. நான் வருமான வரி தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. பொதுவாக கடன் கொடுக்கும்போது கடனை பெறும் நபர் அதை எவ்வாறு திரும்ப செலுத்துவார் என்பதை தெரிந்துகொண்டுதான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். கடன் தொகை பெரிதாக இருக்கும்போது பாதுகாப்புக்கு ஆவணங்களை வாங்கிக்கொண்டுதான் கடன் கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

2. நான் காசோலையை வாங்கிக்கொண்டுதான் பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அளித்த வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன உள்ளது என்றால் கடன் கொடுத்ததை பற்றி இருந்தது. நான் எதிரியும் அவரது வீட்டுக்காரரும் இருக்கும்போது தான் கடன் கொடுத்தேன் என்ற விவரத்தை வழக்கறிஞரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பை படித்துள்ளேனா என்றால் இல்லை. அறிவிப்பில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரிய வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். அந்த அறிவிப்பை யார் பெற்றுக்கொண்டார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. ம.சா.ஆ.4 ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து யாருடையது என்றால் சின்னதுரை என்று எழுதப்பட்டுள்ளது.

3. என்னுடைய முதல் விசாரணையில் வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டார் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவரது கணவர் தான் கையொப்பம் போட்டு வாங்கியுள்ளார். அறிவிப்பை அவரது கணவர் தான்

வாங்கினார் என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் தற்போது தான் தெரியும். அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதாக பொய்யாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. எதிரிக்கும் அவரது கணவருக்கும் இதற்கு முன்பு பலமுறை பணம் கொடுத்துள்ளேன் என்று என்னுடைய அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் நான் கொரோனா காலக்கட்டத்தில் பணம் கேட்டதை மறைப்பதற்காகதான் சம்பவத்தை மிகைப்படுத்தி பொய்யான காரணங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் வருமானம் என்ன என்று எனக்கு தெரியாது.

4. நான் இதற்கு முன் எதிரிக்கு பலமுறை பணம் கொடுத்ததற்கும் அதை எதிரி என்னிடம் திருப்பி கொடுத்தற்கும் ஆவணமோ சாட்சியோ உள்ளதா என்றால் இல்லை. நான் எதிரிக்கு ரூ.2,50,000/−கொடுத்ததற்கு காசோலையை தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான். 2,50,000/−ரூபாய் முழுவதும் 500/−ரூபாய் நோட்டுக்களாக தான் கொடுத்தேன். என்னுடைய வங்கி கணக்கில் ரூ.50,000/−மும், ஆண்டு வருமானம் ரூ.2,00,000/−மட்டுமே இருக்கும் பட்சத்தில் நான் எதிரிக்கு ரூ.2,50,000/− கொடுக்க சாத்தியமே இல்லை என்றால் சரியல்ல, நெல் போட்ட பணம் வந்தது. நெல்லை விற்பனை செய்ததற்கு ரசீது உள்ளதா என்றால் இல்லை, நான் கருங்குழியில் உள்ள வியாபாரியிடம் விற்பனை செய்தேன். அவர் பெயர் என்ன என்றால் அவர் செட்டியார் வகுப்பை சேர்ந்தவர், பெயர் தெரியவில்லை.

5. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் காலம் அறுவடை காலம் இல்லை என்றால் பணம் எனக்கு காலத்தாமதமாக வந்தது. காலத்தாமதமாக கொடுத்த நபரின் பெயரை சொல்ல முடியவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் நெல்லை விற்பனை செய்து பணத்தை கொடுத்திருந்தால் அந்த சங்கதியை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் மற்றும் முதல் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. 2023−2024 காலக்கட்டத்தில் எந்த பயிரும் சரியாக விளையவில்லை என்றாலும் அனைத்தும் மழையில் அழிந்துவிட்டது என்றாலும் சரியல்ல. நான் நெல்லை விற்பனை செய்த ஆவணத்தை தாக்கல் செய்தார் தான் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல.

6. எதிரியின் சொத்துக்கான ஆவணத்தையும், அவர் கட்டும் வீட்டையும் பார்க்காமலே என்னால் அவர் வீடு கட்ட நான் பணம் கொடுத்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே பணம் கொடுப்பவர் அதற்கான ஆவணங்களை சரிபார்த்து தான் கொடுப்பார் என்றால் சரியல்ல. எதிரியின் பஞ்சாயத்துகாரர்களான வேதாச்சலம் மற்றும் மகேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் ரூ.1 லட்சம் போட்டுக்கொள்ளுங்கள் என்று கொடுத்த காசோலையை நான் ரூ.2,50,000/− என்று குறிப்பிட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்கள் யாரும் எனக்கு பஞ்சாயத்து செய்யவில்லை. வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்று எனக்கு தெரியாது. எனக்கு ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியாது.

7. எனக்கு கடன் தொகை ரூ.2,50,000/− வரவில்லை என்று வழக்கறிஞரை பார்த்தேனா என்றால் பார்த்தேன். வழக்கறிஞர் கூறிய அறிவுருத்தலின் பேரில் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூ.2,50,000/− கொடுக்கவில்லை என்றாலும், எதிரி தரவேண்டிய தொகையை விட அதிக தொகையை குறிப்பிட்டு இந்த வழக்கை உண்மைக்கு மாறாக பொய்யாக தாக்கல்

செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரியின் கணவரின் முன்னிலையில் பணத்தை கொடுத்திருந்தால் அவரை சாட்சி பட்டியலில் சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல.